டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 16.10.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 099 | Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# வேளாண் துறையில் சிஎஸ்ஆர் நிதியை பயன்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து



புது தில்லி, அக்.15

வேளாண் துறையில் சிஎஸ்ஆர் எனப்படும் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி ஆதரவு கிடைக்க ஏதுவாக தொழில் துறை நிறுவனங்களுடன் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

வேளாண் துறையில் மத்திய அரசின் பொதுச் சேவை நிறுவனமான அக்ரினோவேட் இந்தியா லிமிடட் நிறுவனத்தின் 15–வது ஆண்டு பொதுக் கூட்டம் மற்றும் 71–வது வாரியக் கூட்டம் புது தில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பிடிலைட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், வெங்கடேஸ்வரா ஹட்செரீஸ் பிரைவேட் லிமிடெட், எவரெஸ்ட் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளில் பொதுநல முன்னெடுப்புகளுக்காக, பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

# பெண் விவசாயிகள் தின கொண்டாட்டத்தில் நானோ யூரியா பயன்பாடு குறித்து வயல்வெளி செயல்விளக்க பயிற்சி!



சேலம், அக்.15

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், நாவலூர் கிராமத்தில் தேசிய பெண் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு வயல்வெளி செயல்விளக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் திவ்யபாலா கலந்து கொண்டு, பெண் விவசாயிகளை ஊக்குவித்து சிறப்புரையாற்றினார். மேலும், வேளாண்மைத் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும், விவசாயிகள் அவற்றை எவ்வாறு பெற்று பயன்பெறுவது என்பது குறித்தும் விரிவாக விளக்கிப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் சக்தி பேசுகையில், 'விவசாயத் துறையில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. நாட்டின் உணவு உற்பத்தியிலும், கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சியிலும் பெண் விவசாயிகளின் உழைப்பு இன்றியமையாதது' என்று குறிப்பிட்டார்.

**நானோ யூரியா செயல்விளக்கம் :** பயிற்சியின் முக்கிய அங்கமாக, பயிர்களுக்கு நானோ யூரியா திரவத்தை எவ்வாறு சரியான முறையில் தெளிப்பது மற்றும் பயன்படுத்துவது என்பது குறித்து விவசாயிகளுக்கு நேரடி வயல்வெளி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் JSA வேளாண்மைக் கல்லூரி நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் அருள்ஜோதி, அருண் குமார், ஆஷிஷ், அருண் தீபக், பாலயோகி ஹரிகரன், கௌதம் ஆகியோர் கலந்து கொண்டு, நானோ யூரியாவின் நன்மைகள் மற்றும் அதைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து பெண் விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் அளித்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இப்பயிற்சி முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முத்துவேல் மற்றும் ரமேஷ் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். இதில் திரளான பெண் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறை அமைக்கும் முறை குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கப் பயிற்சி



பெரம்பலூர், அக்.15

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில், திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள், வ.அபிதா, செ.தேவ தர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு அங்கமாக, மாணவிகள் சிறுவயலூர் கிராம விவசாயிகளுக்குப் பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறையின் அமைப்பு, செயல்படும் விதம் மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல் விளக்க பயிற்சியளித்தனர்.

பூஜ்ஜிய ஆற்றல் குளிர் அறை என்பது மின்சாரம் இன்றி, ஆவியாதல் குளிரூட்டல் கொள்கையின் அடிப்படையில் செயல் படும் எளிய சேமிப்பு அமைப்பாகும். இது பழங்கள் மற்றும் காய்கறிகளின் புத்துணர்ச்சியைப் பாதுகாக்கவும், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கவும் உதவுகிறது.

இதன் மூலம் விவசாயிகள் தங்களின் விளைபொருட்களைச் சிறந்த முறையில் பாதுகாத்து, சந்தையில் உரிய விலை கிடைக்கும் வரை சேமித்து வைக்க முடியும். மின்சாரம் தேவையில்லாததால், இது சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு ஏற்ற தொழில்நுட்பமாகவும் விளங்குகிறது. இப்பயிற்சி குறித்த சந்தேகங்களை விவசாயிகள் மாணவிகளிடம் தெளிவாக கேட்டு அறிந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மக்காச்சோளம் பயிரில் சிறந்த நன்னெறி வேளாண் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி



சேலம், அக்.15

சேலம் மாவட்டம், பெத்த நாயக்கன்பாளையம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் பண்ணை பள்ளி பயிற்சி சின்னம்ம சமுத்திரம் கிராமத்தில் 12.10.26 அன்று நடைபெற்றது.

மௌலிதரன், வேளாண்மை அலுவலர், மக்காச்சோளம் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள், வேளாண் மற்றும தோட்டக்கலை நலத்திட்டங்கள், மண் மாதிரி பரிசோதனை, மண் நல மேலாண்மை, சமச்சீர் உரப்பயன்பாட்டு முறைகள், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர், நுண்ணுயிர் பாசன திட்டம், விதை பண்ணை அமைப்பதன் வரும் நன்மைகள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

பயிற்சியின் பயிற்சியாளர் பிரவீன் பண்ணை பள்ளியின் முதல் வகுப்பு மக்காச்சோள பயிருக்கு ஏற்ற பருவம், மண் மாதிரி எடுத்தல், ரகம், விதை அளவு, ரசாயன மற்றும் உயிரியல் விதை விதை நேர்த்தி, விதைப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது.

ராஜ்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் அட்மா திட்டத்தில் செயல்படுத்தும் பயிற்சி செயல்விளக்கம் கண்டுணர்வு சுற்றுலா பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். பயிற்சியில் வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர் பிரியங்கா செய்திருந்தார்.

# பெண் விவசாயிகள் தின நிகழ்வு



இராணிப்பேட்டை, அக்.15

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரத்தில், சர்வதேச மகளிர் ஆண்டை முன்னிட்டு கரியாகுடல் கிராமத்தில் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் சர்வதேச பெண் விவசாயிகள் தின நிகழ்ச்சி வேளாண்மை உதவி இயக்குனர்அருணா குமாரி தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில் விவசாயத்தில் பெண்களின் பங்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். பெண்கள் அனைவரும் விவசாயத்தில் ஆர்வமுடன் ஈடுபட்டு வேளாண்மைத் துறை மூலம் கிடைக்க பெறும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி குறைந்த செலவில் விளைச்சலை மும்மடங்கு உற்பத்தி செய்ய வேண்டும். மேலும் மண் பரிசோதனை முறை, பசுந்தாள் உரங்கள் பயன்பாடு, பயிர் சுழற்சி முறை, வரப்பு பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் கடைபிடித்து பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

டான் பாஸ்கோ வேளாண்மை கல்லூரி முதல்வர் புவிழா சிறப்பு விருந்தினராக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இயற்கை விவசாயம் குறித்த தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்து கூறி பெண் விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் ஆர்வம் காட்டி வேளாண்மையில் சாதனை படைக்க வேண்டும் என கூறினார். இந்நிகழ்ச்சியை வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி ஒருங்கிணைத்து அனைவரையும் வரவேற்று பேசினார். தோட்டக் கலைத்துறை சார்பில் உதவி தோட்டக்கலை அலுவலர் சுமித்ரா கலந்து கொண்டு காய்கறி சாகுபடிகள் குறித்து பேசினார். வேப்பேரி கிராமத்தைச் சேர்ந்த இலக்கியா பெண் விவசாயி களுக்கு மதிப்பு கூட்டுதல் குறித்து பயிற்சி அளித்தார். மேலும் தான் சிறுதானியங்களில் பல்வேறு லட்டு வகைகள் ,முருங்கை கீரை பொடி, வல்லாரை பொடி என பலதரப்பட்ட வேளாண் விளைப் பொருட்களை வைத்து மதிப்பு கூட்டி ராணீஸ் சிறுதானிய மதிப்பு கூட்டு பொருட்கள் என்ற பெயரில் தான் பல பேருக்கு ஆர்டரின் பெயரில் வெற்றிகரமாக சுய தொழில் செய்து வருவதாகவும் பயிற்சி தேவைப்படும் பெண் விவசாயிகள் தன்னை அணுகினால் பயிற்சி அளிப்பதாகவும் உறுதியளித்தார்.

பள்ளூர் கிராமத்தைச் சார்ந்த தலித் பெண்கள் கூட்டு விவசாய பண்ணை குழு தலைவர் சகிலா கலந்து கொண்டு தாங்கள் 20 பேருக்கு மேலாக தலித் பெண்கள் ஒரு குழுவாக இணைந்து மேட்டுப்பாங்கான நிலத்தில் வேளாண் சாகுபடி வெற்றிகரமாக செய்து வருவதாக கூறினார். நிகழ்ச்சியில் நெமிலி வட்டாரத்தில் தங்கி வேளாண் அனுபவ பயிற்சி பெறும் டான்பாஸ்கோ கல்லூரியை சேர்ந்த 10க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு பெண் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பேசினர். நெமிலி வட்டாரத்தை சார்ந்த பல்வேறு கிராமங்களில் இருந்தும் பெண் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் ஏற்பாடு செய்திருந்தார்.

# முன்னோடி விவசாயியைச் சந்தித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்!



திருவாரூர், அக்.15

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் முன்னோடி விவசாயி ரவிச்சந்திரனுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, அவரால் பின்பற்றப்பட்டு வரும் வேளாண் தொழில்நுட்பங்கள், பயிர் சாகுபடி முறைகள், மண் வள மேலாண்மை, நீர் மேலாண்மை, இயற்கை இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் பூச்சி, நோய் மேலாண்மை முறைகள் குறித்து விளக்கங்கள் பெறப்பட்டது. மேலும், வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகள், சாகுபடியில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்த தகவல்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

முன்னோடி விவசாயியின் கள அனுபவங்கள் வாயிலாக நடைமுறை வேளாண் அறிவைப் பெறுவதற்கும், வகுப்பறையில் கற்றுக் கொண்ட தொழில்நுட்பங்களை விவசாய நடைமுறைகளுடன் ஒப்பிட்டுப் புரிந்துகொள்வதற்கும் மாணவர்களுக்கு இந்நிகழ்வு பயனுள்ளதாக அமைந்தது. இதன் மூலம், முன்னோடி விவசாயியின் அனுபவங்கள் மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# கோழிப்பண்ணைகளில் ஈக்களை கட்டுப்படுத்துதல் கருத்தரங்கில் பங்கேற்க அழைப்பு

திருப்பூர், அக்.15

திருப்பூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணைத் தொழில் மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைந்து முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதில் நாம் எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியே. இத்தொழில் மேலும் வளர்ச்சியடைய நோய் தடுப்பு மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும். இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கொண்டு கோழிகளைத் தாக்கும் பல கொடிய நோய்களை கட்டுப்படுத்தி பொருளாதார இழப்பினை தடுக்கமுடிகிறது. ஆனால். சமீப காலமாக நம் நாட்டில் நிலவும் தட்பவெப்பநிலை மற்றும் பண்ணை மேலாண்மையிலுள்ள சில பிரச்சனைகளால் கோழிப் பண்ணைகளில் ஈக்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே போகிறது. இந்த ஈக்களின் பெருக்கத் தினால் சுகாதார பிரச்சனை ஏற்பட நேரிடும் என்ற அச்சத்தில் பண்ணைக்கு அருகில் வசிக்கும் கிராம பொதுமக்கள் அதிகாரிகளிடத்தில் முறையிடுகிறார்கள். இதனால் பண்ணைய–ாளர்களுக்கும் பொதுமக்கட்களுக்குமிடையே உள்ள நட்புகள் பாதிக்கப்பட்டு சில நேரங்களில் பண்ணையாளர்களுக்கு தொழில் நடத்துவதில் சிரமம் ஏற்படுகிறது. நம் பண்ணையாளர் களும் ஈக்களை அழிப்பதற்க்காக தீவிர முயற்சி எடுத்தாலும். அவர்களால் ஈக்களின் எண்ணிக்கையை தற்காலிகமாகத்தான் குறைக்க முடிகிறது. அதனால், கோழிப்பண்ணைகளில் ஈக்களின் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்படுத்துதல் உத்தியை பயன்படுத்தலாம் என்பதை மனதில் கொண்டு எங்கள் கால்நடை ஒட்டுண்ணியியல் துறையில் ‘ஒருங் கிணைந்த மேலாண்மை உத்திகளைக் கொண்டு கோழிப் பண்ணைகளில் ஈக்களை கட்டுப்படுத்துதல்‘என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு 23.10.26 அன்று காலை 9.00 மணி நடைபெற உள்ளது.

கருத்தரங்கில் கோழிப்பண்ணைகளில் ஈக்களின் தொல்லை குறித்த தற்போதைய நிலைமை, கோழிப்பண்ணைகளில் காணப்படும் ஈக்களின் வகைகள், ஒருங்கிணைந்த முறையில் ஈக்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஈக்களினால் கோழிகளுக்கு

ஏற்படும் நோய்கள் பற்றிய கலந்துரையாடல் வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. ஆகையால் பண்ணையாளர்கள், மேற்பார்வையாளர் கள் மற்றும் உதவியாளர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி முதல்வர் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை கேட்டுக்கொள்கிறார்.

மேலும் இக்கருத்தரங்கின் இறுதியில் சான்றிதழ் வழங்கப் படும். இப்பயிற்சியில் முதலில் பதிவு செய்யும் 100 நபர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும். முன்பதிவுக்கு நேரிலோ அல்லது அலைபேசி மூலமாகவோ முனைவர் மா.சிலம்பரசன் - செல் : 90275 61807 மற்றும் முனைவர் சி.சங்கர் - செல் : 99430 08802 தொடர்பு கொண்டு 21.10.26 தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை ஒட்டுண்ணியியல் துறை உடுமலைப் பேட்டை கேட்டுக் கொள்கிறார்.

# ஒருங்கிணைந்த பண்ணை முறை விவரித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாகப்பட்டினம், அக்.15

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் இறுதி ஆண்டு மாணவிகள் சித்தமல்லி தென் பாதி கிராமத்தில் உள்ள இளஞ்செழியனது ஒருங்கிணைந்த பண்ணை முறையை பார்வையிட்டனர். பரண்மேல் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, வாத்து வளர்ப்பு மேலும் 40 ஏக்கர் நெல் சாகுபடியும் செய்து வருகிறார். ஜமுனா பாரி, கொடியாடு, தலச்சேரி ஆகிய ஆடு வகைகளையும் றூலிலிவிள என்ற வாத்தையும் வளர்த்து வருகிறார். மீன் குட்டையில் ரோகு, கட்லா, மிருகல் ஆகிய மீன் வகைகளை வளர்த்து வருகிறார். மேலும் பயிர் சாகுபடியுடன் இணைந்து மீன் வளர்ப் பினையும் மேற்கொண்டுள்ளார். தென்னை, கல்யாண முருங்கை, கிளைரிசிடியா, ஆகிய மர வகைகளையும் குறுகிய இடங்களில் பராமரித்து வந்துள்ளார். முட்கள் இல்லா மூங்கில் மரத்தையும் வளர்த்து வருகிறார். கோழியின் எச்சங்கள் மீன்களுக்கு உணவாக பயன்படுத்துவதுடன் கூஸ் வாத்து தாவரங்களை உணவாக உட்கொள்வதால் மீன்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் குட்டையில் இருப்பதில்லை. இதன் மூலம் கல்லூரி மாணவிகள் ஒருங் கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்களை அறிந்து கொண்டனர்.

# அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.15

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27ஆம் ஆண்டு காமாட்சிபுரம் கிராமத்தில் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி திருப்பரங்குன்றம், வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. மகளிர் விவசாயிகள் தினம் கொண்டாட வேண்டிய தருணம் குறித்தும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் குறித்தும் விவசாயிகளிடத்தில் நிலையான வேளாண்மை நடைமுறையாகும் என்பதை விளக்கி கூறினார்கள்.

விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ராம லக்ஷ்மி, பெண்கள் விவசாயத்தில் ஈடுபடும் முறைகள் தனித்துவ மான செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். பத்மா சிறுதானிய மதிப்பு கூட்டுதல் உற்பத்தியாளர் கம்பு மிக்ஸ், சிறு தானிய மிக்ஸ், பாயாசம், லட்டு உருண்டை ஆகிய தயாரித்தல் குறித்தும் உற்பத்தி முறைகள் விற்பனை முறைகள் குறித்தும் எடுத்துக் கூறினார். சிறுதானிய பொருட்கள் உற்பத்தியாளர் இவளின் பொன்மலர் பேசுகையில், சிறுதானிய உற்பத்தி முறைகள் மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிக்கும் முறைகள் விற்பனை முறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி பாரம்பரிய நெல் வகைகள் சிறுதானிய பயிர்கள் உயிர் உரப் பயன்பாடு விவசாய நடை முறைகள் குறித்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் அழகேசன் வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய திட்டத்தில் வழங்கப்படும் நெல் வகைகள் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை அதிக அளவில் ரசாயன உரங்களின் மீது சார்ந்து இருப்பதை குறைக்க உதவுகிறது என்பதை விவசாயிகளுக்கு கூறினார். இம்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சிக்கு விவ சாயிகள் மற்றும் செயல் விளக்கம் அமைப்பினை தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா வரவேற்புரை மற்றும் நன்றியுரை வழங்கினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண்மையில் பாரம்பரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது எப்படி?

வேளாண்மையில் அதிநவீன தொழில்நுட்பங்கள் வந்தாலும் தற்போது பாரம்பரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது பற்றி விரிவாக பார்ப்போம். பாரம்பரிய தொழில்நுட்பங்களை செயல்படுத்துவது எளிது, குறைந்த செலவில் நச்சு இல்லாத உணவை உற்பத்தி செய்ய உதவுகின்றன.

**இவையாவும் எளிதாக உள்ளூரிலே கிடைக்க கூடிய இடுபொருட்கள்**

**1) வேப்ப எண்ணெய் தெளிப்பு**

பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் + 3 கிலோ மணல் + 3 கிலோ சாணத்தை 3 நாட்கள் ஈரம் காயாமல் ஈர சாக்கு கொண்டு போர்த்தி குவியலாக வைத்து 4ஆம் நாள் அதை 150 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பதால் அசுவினி, தத்துபூச்சி, இலைப்பேன் போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை (SUCKING PESTS) கட்டுப்படுத்தலாம்.

2) 10 கிலோ காய்ந்து போன சாணத்தை தூளாக்கி அத்துடன் செங்கல் சூளை சாம்பல் சேர்த்து அதிகாலை வேளையில் தூவினால் கதிர் நாவாய் பூச்சி மற்றும் சாம்பல், துரு நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**எரு இலை கரைசல்**

எருக்கு இலை மற்றும் வேப்பம் புண்ணாக்கை மண் கலயத்தில் இட்டு மூழ்குமாறு நீர் ஊற்றி வயலில் வைத்திருந்தால், அந்த வாடையால் வயலில் உள்ள அந்து பூச்சிகள் கவரப்படும்.

ஊமத்தை காயோடு எருக்கு இலை அரைத்து 15 நாட்கள் நீரில் ஊறவைத்து வடிகட்டி தெளித்தால் அனைத்து வகை யான பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

**கரையானை கட்டுப்படுத்த?**

வயலைச்சுற்றி பிரண்டையை நட்டு வைத்தால் மண்ணில் உள்ள கரையான்கள் (TERMITES) தொல்லை வெகுவாக குறையும்.

**மண் அரிப்பை தடுக்க என்ன செய்ய வேண்டும்**

மண்ணில் ஏற்படும் அரிமானத்தை தடுக்க (SOIL EROSION) வெட்டிவேர் புல்லை மண்சரிவுக்கு குறுக்காகவோ அல்லது வயலைச்சுற்றி நட்டால் மண் அரிமானத்தை தடுக்கலாம்.

கிணற்று அருகில் பூவரசு மரத்தை நட்டு வளர்த்தால் கிணற்று நீர் ஆவியாவதை தடுக்கலாம் (EVOPRATION).

**தானிய சேமிப்பு முறைகள்?**

1) 100 கிலோ தானியங்களில் வண்டுகள், பூச்சிகள் தாக்காமல் இருக்க ஒரு கிலோ வசம்பு தூளை போடலாம்.

2) 10% உப்புக்கரைசலில் சாக்கு பை நனைத்து பின் காய வைத்து அதில் பயறு வகை மற்றும் தானியங்களை சேமித்தால் பூச்சி தாக்குதலை கட்டுபடுத்தலாம்.

3) உளுந்தில் தேங்காய் எண்ணெய் தடவி காய வைத்தால் பூச்சி தாக்குதல் இருக்காது.

4) துவரை பயறுகளை செம்மண் கலந்து பூசி வைத்தால் வண்டுகள் பூச்சிகள் இருக்காது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# சர்வதேச மகளிர் விவசாயிகள் தினம் விழா



கடலூர், அக்.15

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் மற்றும் வேளாண்மை துறை, கடலூர் இணைந்து சர்வதேச மகளிர் விவசாயிகள் தின விழா 15.10.26 அன்று வேளாண்மை அறிவியல் நிலையலத்தில் நடைபெற்றது. இவ்விழாவினை சுகன்யா (வேளாண் அலுவலர்), வரவேற்புரை நிகழ்த்தினார். ஆடுதுறை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் முனைவர் மணிமாறன், சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, சிறப்புரையாற்றி, பெண் விவசாயம் சார்ந்த தொழில் முனைவோருக்கான பல்வேறு வங்கிகளில் தரும் நிதி உதவிகளை பற்றி எடுத்துரைத்தார். விருத்தாசலம், மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர். இரா.பாஸ்கரன் நெற்பயிரில் விதை உற்பத்தி செய்து, வருமானத்தை ஈட்ட கேட்டுக்கொண்டார். ஆடுதுறை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர். முனைவர் இர.தமிழ்வேந்தன், தலைமையுரையாற்றி, பெண்களுக்கு நிதியுதவி வழங்கி, உரிமைகளை நிலைநாட்ட வேண்டுகோள் விடுத்தார். வேளாண்மை இணை இயக்குநர் (பொ) கடலூர், அமிர்தராஜ், தலைமையுரையாற்றி, வெற்றியாளர்களை பார்த்து பிறரும் வாழ்வில் முன்னேற்றம் பெற வலியுறுத்தினார்.

இவ்விழாவில், ரங்கநாயகி, பவுனம்பாள், தமிழரசி, சில-ம்புச்செல்வி, சங்கரி, சுமதி, ஜோதி ஆகியோர்களுக்கு விருது வழங்கி அவர்களது வெற்றிகதைகளை பரிமாறிக் கொண்டனர். இறுதியாக இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர். பொறுப்பு கம்மாபுரம் சுபா, நன்றியுரை கூறினார். இவ்விழாவில் கடலூர் மாவட்டத்தை சோந்த 50க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# விவசாயிகளுக்கு மானிய விலையில் பண்ணை கருவிகள்

கிருஷ்ணகிரி, அக்.15

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி,முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது : தளி வட்டாரத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வேளாண் பண்ணைகருவிகள், தெளிப்பான், சுழல் கலப்பை,




பவர்வீடர்,பவர் டில்லர்வழங்கப்படஉள்ளது. விவசாயிகள் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

விவரங்களுக்கு பெ.கண்ணன் தசரூபன், உதவி வேளாண் அலுவலர் (கோட்டமடுகு, அந்தேவனப்பள்ளி) 94437 18250, எ.விக்கிரமாதித்தன், உதவி வேளாண் அலுவலர் (கக்கதாசம், மாடக்கல்) 96987 77080, மு.அரிகுமார், உதவி வேளாண் அலுவலர் (மல்லசந்திரம், தேவகானப்பள்ளி) 98657 08173, சக்திவேல், உதவி வேளாண் அலுவலர் (துளி, அஞ்செட்டி) 63699 48926, நரேஷ், உதவி வேளாண் அலுவலர் (பள்ளப்பள்ளி) 87541 25007, முனிசேகரன், உதவி தோட்டக்கலை அலுவலர் (தாரவேந்திரம்) 94437 18250, செந்தில் குமார், உதவி தோட்டக்கலை அலுவலர் (கும்ளாபுரம், பெரியமதகொண்டபள்ளி) 94437 18250, ஜான்சிராணி, உதவி தோட்டக்கலை அலுவலர் (ஜவளகிரி) 94429 11937, பார்த்திபன், உதவி தோட்டக்கலை அலுவலர் (சாத்தனூர்) 95663 09881, சந்தியா, உதவி தோட்டக்கலை அலுவலர் (ஆச்சுபாலு, அகலகோட்டை) 63833 86731, செந்தமிழ் செல்வன், உதவி தோட்டக்கலை அலுவலர் (தொட்டஉப்பனூர், நாட்றாம் பாளையம்) 80566 93991, முரளி, உதவி தோட்டக்கலை அலுவலர் (சாலிவரம், தண்டரை) 96778 50757, வெங்கடாசலபதி, உதவி தோட்டக்கலை அலுவலர் (கோட்டையூர், தக்கட்டி, மதகொண்டப்பள்ளி) 99449 56407.

விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை, சிட்டா, சிறு, குறு சான்று,வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களை கொண்டு வந்து உழவன் செயலியில் பதிவு செய்து தங்கள் கிராமங்களுக்கு உட்பட்ட உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சர்வதேச மகளிர் விவசாயிகள் தின கொண்டாட்டம்

மதுரை, அக்.15

2026-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மூலம் பெண் விவசாயிகளின் சர்வதேச ஆண்டாக (International Year of the Woman Farmer - IYWF 2026) அறிவிக்கப்பட்டுள்ளது. தவிர, அக்டோபர் 15, 2026 அன்று சர்வதேச ஊரகப் பெண்கள் தினம் (International Day of Rural Women) கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் (2026) அதன் கருப்பொருள் : 'இயற்கை அன்னையைப் பாதுகாக்கும் கிராமப்புறப் பெண் விவசாயிகள்' (Rural Women Farmers Caring for Mother Nature) 2026-ம் ஆண்டு உலகம் முழுவதும் பெண் விவசாயிகளின் பங்களிப்பை அங்கீகரிக்கவும், வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் பெண்களின் பங்கை வெளிச்சம் போட்டுக் காட்டவும் இந்த ஆண்டு பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சுமார் 80% கிராமப்புறப் பெண்கள் விவசாயப் பணிகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், அவர்களில் வெறும் 13.9% பேரின் பெயரில்தான் வேளாண் நிலங்கள் உள்ளன. பெண் விவசாயிகளுக்கு சம உரிமை மற்றும் ஊதியம், நிலவுடைமை மற்றும் நீர் மேலாண்மையில் பெண்களுக்கு முக்கியத்துவம், முடிவெடுக்கும் அதிகாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த மகளிர் விவசாயிகள் தின கொண்டாட்டத்தினை மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டார வேளாண்மைத்துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை (ATMA) திட்டம் மூலம் 15.10.26 அன்று மஞ்சம்பட்டி கிராமத்தில் கொண்டாடப்பட்டது. மேலும், உயிர்ம விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சியும் மேற் கொள்ளப்பட்டது. இந்த மகளிர் விவசாயிகள் தின விழாவிற்கு மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) அ.இராணி, தலைமையுரை ஆற்றி மகளிர் விவசாயிகளை நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து உயரிய மகசூல் பெறும் உத்திகளை விளக்கி கூறினார். மேலும் பெண் விவசாயிகளை தொழில்முனைவோராக மாற்றுவதற்கு வாழ்த்து

தெரிவித்தார். மதுரை, நீர் மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் ச.கமலாலெட்சுமி, மகளிர் விவசாயிகள் அனைவரும் தொழில்நுட்பங்களை உழவன் செயலி மற்றும் நவீன செயலிகள் மூலம் அறிந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார்.

மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன், துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விளக்கினார். வேளாண் பொறியாளர் ஹேமா, பெண் விவசாயிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட வெற்றி வான்மகள் திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியத்தில் ட்ரோன் பயிற்சி மற்றும் சான்றிதழ் பெறும் திட்டம் குறித்து விளக்கினார். மஞ்சம்பட்டி கிராம அரசு உயர் நிலைப்பள்ளி தலைமையாசிரியை எம்.லிங்கேஸ்வரி, சர்வதேச மகளிர் தினத்தின் முக்கியத்துவம் குறித்து விவரித்து மாணவர் களுக்கு இயற்கை விவசாயம் குறித்து பயிற்சியளிக்க வேண்டுகோள் விடுத்தார்.

மதுரை மேற்கு வட்டார விருது விவசாயி ப.பிரசன்னா, திருந்திய நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் பெற்று சாதனை அடைந்தமைக்கான தமிழக முதல்வரால் மாநில அளவிலான சிறந்த விவசாயி விருது பெற்ற வழிமுறைகள் மற்றும் தற்போதைய நெல் மற்றும் பாசிப்பயறு விதைப்பண்ணை அமைத்து விதை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் வழிமுறைகளை விவரித்தார். பின்னர் மகளிருக்கான விளை-யாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மகளிர் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் பிரபு, ATMA திட்டப்பணியாளர்கள் வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ராஜசேகர், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பாலமுருகன் மற்றும் ஸ்ரீஹரிணி ஆகியோர் செய்திருந்தனர்.



கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# விதைப்பரிசோதனை செய்ய அழைப்பு

இராமநாதபுரம், அக்.15

தரமான விதைகளே சிறந்த விளைச்சலுக்கு அடிப்படை! எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் இருப்பு வைத்துள்ள விதைகளின் தரத்தை உறுதி செய்து கொள்ள, தங்களிடம் உள்ள விதை மாதிரிகளை பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், பிறரக கலவன் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு விதை மாதிரிக்கு ரூ.80/-மட்டுமே பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளை கொடுத்து, விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பயிர்களின் விதை மாதிரியின் அளவு பின்வருமாறு : நெல்-50 கிராம், சோளம்-100 கிராம், கம்பு (ம) கேழ்வரகு-25 கிராம், மக்காச்சோளம்-500 கிராம், உளுந்து-100 கிராம், நிலக்கடலை-500 கிராம், எள்-25 கிராம், மிளகாய்-10 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச விதை மாதிரியை பரமக்குடி, விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப்பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளலாம் என விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி, ப.வீரபாண்டியன் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

# மகளிர் விவசாயிகள் தினம் & மகிளா கிசான் திவாஸ் நடைபெற்றது

புதுக்கோட்டை, அக்.15

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டாரம், திணையா குடியில் மகளிர் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு வேளாண் உழவர் நலத்துறையின் கீழ் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியை ரா.செல்வராஜ், துணை வேளாண்மை அலுவலர் (பொ), தொடங்கி வைத்து பெண் விவசாயிகளின் முன்னேற்றம், தொழில்முனைவோர் மேம்பாடு, தொழில்நுட்ப அறிவு மற்றும் தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் வகையில் பேசினார். இந்நிகழ்ச்சியில் கோபிகா, உதவி கால்நடை மருத்துவர், மணமேல்குடி, கவின், உதவி பேராசிரியர் (மண்வளம்), கலா, முன்னோடி விவசாயி, சங்கீதா, சமூக வள பயிற்றுநர், அனு கீர்த்தனா, உதவி வேளாண்மை அலுவலர், ஆயிமுத்து, உதவி வேளாண்மை அலுவலர், கலைவாணி, வட்ட சட்ட பணிகள் குழு, மணமேல்குடி ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் துறையில் உள்ள திட்டங்கள் குறித்து எடுத்து கூறினார்கள். இறுதியாக சு.மகேஷ்வரி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் நன்றி கூறினார். இந்நிகழ்சிக்கான ஏற்பாடுகளை அ.பிரபுராஜ், மா.துரைராஜ், உதவி தொழில் நுட்ப மேலாளர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# தேசிய பெண் விவசாயிகள் தின விழா



மதுரை, அக்.15

தேசிய பெண் விவசாயிகள் தின விழாவானது, மதுரை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 15.10.26 அன்று வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் தொழில் முனைவோர் என்ற தலைப்பின் கீழ் கொண்டாடப்பட்டது. முனைவர் கி.சுரேஷ், முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் வேளாண்மை மகளிர் உழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொழில்நுட்ப வல்லுநர்கள், முனைவர்கள் கு.ஆனந்த், இ.சுப்ரமணியன், ப.அருள் அரசு, கு.செல்வராணி ஆகியோர் வேளாண்மையில் மகளிரின் பங்கு பற்றி எடுத்துரைத்தனர். முனைவர் கி.ஜோதிலட்சுமி, தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்) பாலில் இருந்து பன்னீர் தயாரித்தல் மற்றும் பன்னீரை பதப்படுத்துதல் குறித்த பயிற்சியை நடத்தினார். இந்நிகழ்ச்சியில் 164 பண்ணை மகளிர், தொழில் முனைவோர் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பெண் விவசாயிகள் கண்மணி, வெள்ளையம்மாள் மற்றும் தொழில் முனைவோர் அமுதா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

# மின்னணு விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, அக்.15

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டார வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில் நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் கள்ளிக்குடி ஊராட்சி மன்ற அலுவலக கூட்ட அரங்கில் மின்னணு விவசாயம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ.சந்திரகலா, தலைமையேற்று தொடங்கி வைத்து மின்னணு விவசாயம் குறித்து விளக்கினார். வேளாண்மை அலுவலர் முனைவர் கு.மாரியப்பன், மின்னணு விவசாயத்தின் அவசியம் பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் விளக்கினார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் திவ்யா, மின்னணு விவசாய தொழில்நுட்பங்கள் பற்றியும் மானியத் திட்டங்கள் பதிவு செய்வது பற்றியும் விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி, மின்னணு விவசாயம் குறித்த கைபேசி செயலிகளின் பயன்பாடு குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவி தொழில்நுட்ப மேலாளர் லாவண்யா, நன்றியை தெரிவித்துக் கொண்டார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் வே.யுவராஜ்குமரன் செய்திருந்தார்.

# வயல்களில் விளக்குப் பொறி நிறுவ அறிவுத்தல்

திருச்சி, அக்.15

உழவர் பெருமக்களே, தற்போது அனைத்து மாவட்டங்களிலும் ஆங்காங்கே நல்ல மழை பெய்துள்ளது. இதன் காரணமாக, மண்ணில் கூட்டுப்புழுவாக உள்ள அனைத்து தீமைப் பூச்சிகள், அந்து பூச்சியாக அதாவது பட்டாம் பூச்சி உருவில் வெளிவரும். இது தனக்கு விருப்பம் மற்றும் உணவாக விரும்பும் பயிர்களில் முட்டையிட்டு தமது இனத்தை பெருக்கி பயிரில் புழு பருவத்தை அடைந்து தாக்குதல் ஏற்படுத்தும். ஆகையால் விவசாயிகள் அனைவரும் வருமுன் காப்போம் முயற்சியாக மாலை வேளையில் (6–10 மணி வரை) வயல்களில் விளக்குப்பொறி

நிறுவுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். விளக்குப்பொறி அமைக்க இயலாத விவசாயிகள் வயல் ஓரங்களில் மாலை வேளையில் (இருட்டிய பின்) ஒரு முறை சொக்கப்பனை கொளுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதன் மூலம் விவசாயிகள் பயிர்களை தாக்க கூடிய புழு பிரச்சனைகளை எளிதில் தீர்வு காணலாம். இவ்வாறு மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி விவசாயிகளை அறிவுறுத்துகிறது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# கால்நடை மருந்தகத்தில் வேளாண் மாணவர்களுக்குக் கால்நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி!




நாகப்பட்டினம், அக்.15

திருவாரூர் மாவட்டம், குடவாசலில் உள்ள கால்நடை மருந்தகத்தில் அக்டோபர் 13ஆம் தேதி வேளாண் மாணவர்கள் நேரில் சென்று கால்நடைகளின் நோய்கள், அவற்றைப் பராமரிக்கும் முறைகள் மற்றும் கால்நடை மருத்துவம் குறித்த விரிவான விளக்கங்களைப் பெற்றனர்.

இந்நிகழ்வின்போது கால்நடை மருத்துவர் Dr.ஜெயபால் மாணவர்களுக்குப் பல்வேறு கால்நடைகளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் பராமரிப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக, மாடுகளுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள், அவற்றின் அறிகுறிகளைக் கண்டறிதல், நோய்த் தடுப்பு முறைகள் மற்றும் முறையான உணவு மேலாண்மை குறித்து விளக்கினார்.

மேலும், மாடுகளின் இனப்பெருக்கத்தை மேம்படுத்த உதவும் செயற்கைக் கருவூட்டல் (Artificial Insemination) முறையின் முக்கியத்துவம், அதன் செயல்முறை மற்றும் கால்நடை மருத்துவரின் வழிகாட்டுதலுடன் மேற்கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் மாணவர்கள் அறிந்துகொண்டனர்.

ஆடுகளுக்கு ஏற்படும் நோய்கள், அவற்றுக்குத் தேவையான தடுப்பூசிகள், தீவன மேலாண்மை மற்றும் கொட்டகைப் பராமரிப்பு முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. கோழிகளின் வளர்ப்பு முறைகள், கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள், தடுப்பூசி அளித்தல் மற்றும் சுகாதாரமான கோழிப்பண்ணை மேலாண்மை பற்றியும் மாணவர்கள் தெரிந்துகொண்டனர்.

கால்நடை மருத்துவம் குறித்த இந்த நேரடி அனுபவம் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவையும், கால்நடை வளர்ப்பு பற்றிய புரிதலையும் மேம்படுத்தியது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினத்தை முன்னிட்டு மாடித்தோட்டப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு



சிவகங்கை, அக்.15

சிவகங்கை மாவட்டம், விசாலயன் கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிலும் மாணவர்கள் வி.ஹேமன், கோ.ஆதித்தியன், வீ.கோகுல் யஷ்வந்த், மு.லெனில் அசோக், ஆ.பால் லித்திக் ராஜ் மற்றும் சே.சேது மாதவன் ஆகியோர் சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கிராமப்புறப் பெண்களின் பொருளாதார முன்னேற்றம், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்துவது குறித்து எடுத்துரைக் கப்பட்டது. மேலும், மாடித்தோட்டம் அமைக்கும் முறைகள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டதுடன், விதைகளும் வழங்கப்பட்டன.

மாடித்தோட்டம் மூலம் வீட்டிற்குத் தேவையான காய்கறிகளைப் பயிரிட்டு, குடும்பச் செலவைக் குறைப்பதோடு ஊட்டச்சத்து மிக்க உணவையும் பெறலாம் என எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வேளாண்மை சார்ந்த சுயதொழில்களில் ஈடுபட்டு குடும்ப வருமானத்தை உயர்த்தவும், சுயசார்பு வாழ்க்கையை உருவாக்கவும் கிராமப்புறப் பெண்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பையும் சாதனைகளையும் அங்கீகரித்து, அவர்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் இந்நிகழ்ச்சி அமைந்தது. இத்தகைய களப்பணிகள் மூலம் மாணவர்கள் கிராமப்புற மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வைப் பரப்பினர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741